1410

Register Number | | | | | | |

# தமிழ் — இரண்டாம் தாள்

காலம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

ii) முகவுரை, பொருளுரை, முடிவுரை என்ற அமைப்பில் கட்டுரை அமைதல் வேண்டும்.

I. பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றி இரு பக்கங்களில் கட்டுரை வரைக. $1 \times 10 = 10$

1. தாய்ப்பசுவின் செயலையும், கதை உணர்த்தும் நீதியையும் தொகுத்து எழுதுக.
2. பாகப் பிரிவினைக்கு முன்னரும் பின்னரும் உள்ள நிம்மாண்டு நாயக்கரின் வாழ்க்கை.
3. மண்ணாசை - பெயர்ப் பொருத்தத்தை ஆய்க.

II. பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றிக் கடிதம் வரைக. $1 \times 10 = 10$

(*குறிப்பு :* கடிதத்தில் கையொப்பமிடும் இடத்தில் 'X' என்று குறிப்பிடவும். பெயரோ, பதிவு எண்ணோ அல்லது முகவரியோ எழுதினால் விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.)

4. நீவிர் வசிக்கும் பகுதியிலிருந்து வெளியில் சென்றுவரப் பேருந்து வசதி அமைத்துத் தர வேண்டி போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்கு விண்ணப்பம் வரைக.
5. நீ கண்டுகளித்த அறிவியல் கண்காட்சி குறித்து நண்பனுக்குக் ஒரு கடிதம் எழுதுக.
6. களவுபோன பொருளைக் கண்டுபிடித்து தருமாறு காவல்துறை உதவி ஆய்வாளருக்கு ஒரு விண்ணப்பம் வரைக.

III. 7. கீழ்வரும் பாடலைப் படித்து பின்வரும் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக. $5 \times 2 = 10$

புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட.
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்
பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதை எங்கள் உயிரென்று காப்போம்
இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
இது 'எனதெ' ன்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்
உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
'ஒருபொருள் தனி' எனும் மனிதரைச் சிரிப்போம்
இயல்பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்.

*வினாக்கள் :*

i) எதனை வேரோடு சாய்க்க வேண்டும் ?

ii) திசையெட்டும் சேர்க்க வேண்டிய கொள்கை யாது ?

iii) தவிர்க்க வேண்டிய கொடுமை எது ?

iv) எதனிடை, எதனை எரிக்க வேண்டும் ?

v) பசிப்போம், புசிப்போம் என கவிஞர் விளக்கும் கருத்து யாது ?

[ Turn over

IV. 8. கீழ்க்காணும் உரைநடையை *மூன்றில் ஒரு பங்காகச்* சுருக்கி எழுதுக : $1 \times 10 = 10$

செந்தமிழ்ச் சிந்தையார்; சிறந்த சொல்லாளர்; கற்றவழி நின்று வித்தகம் விளைவித்தவர். இப்படிப் பலமுக வடிவம் கொண்ட சிதம்பரனாரைத் தமிழக மக்களில் பெரும்பாலோர் அரசியல் ஆசான், கப்பலோட்டிய தமிழர், தென்னாட்டுத்திலகர் என்று நாட்டுத் தொண்டு வாயிலாக அறிந்து போற்றி வந்துள்ளனர். செந்தமிழும் ஆங்கிலமும் சிறக்கக் கற்றார். வழக்கறிஞராக வாழ்வைத் தொடங்கினார். விடுதலை வீரரானார். தமிழ்மக்களிடம் நாட்டுப்பற்றை, விடுதலை உணர்வை, உள்நாட்டுப்பொருள் பயன்பாட்டை, வெளிநாட்டுப் பொருள் விலக்கை ஊட்டியவர். பல்லாண்டு சிறை சென்றார். கல் உடைத்தார்; செக்கிழுத்தார். ஆங்கில அதிகார வெறியை, வர்த்தகச் சூழ்ச்சியை விரட்டியடிக்க கப்பலோட்டினார். கப்பல் ஒட்டிய தமிழரென்று பெருமிதத்துடன் அழைக்கப் பெற்றார். திலகரைக் குருவாகக் கொண்டார். நாட்டுப்பற்றும் தியாக உணர்வும் அவர்தம் இரு கண்களாக விளங்கின. அவ்வழியில் மக்களை அழைத்துச் சென்றார்.

V. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக :

9. அன்பின் ஐந்திணைகள் யாவை ? $1 \times 2 = 2$

*அல்லது*

முல்லைக்குரிய சிறுபொழுது, பெரும்பொழுதுகளை எழுதுக.

10. தும்பைத் திணையாவது யாது ? $1 \times 2 = 2$

*அல்லது*

பாடாண்திணையை விளக்கு.

11. வெண்பாவின் பொது இலக்கணம் யாது ? $1 \times 2 = 2$

*அல்லது*

ஆசிரியப்பா எத்தனை வகைப்படும் ?

12. கீழ்க்காணும் குறளை அலகிட்டு வாய்பாடு கூறுக : $1 \times 2 = 2$

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்

காக்கினென் காவாக்கா லென்.

13. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்குப்** பகுபத உறுப்பிலக்கணம் தருக : $2 \times 2 = 4$

i) வாழ்க ii) போற்றுதும்

iii) அளித்தல் iv) உயர்ந்து.

14. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்கு** இலக்கணக் குறிப்பு தருக: $2 \times 2 = 4$

i) வெண்குடை ii) மாமழை

iii) கற்பும் காதலும் iv) அருமையே அருமையே.

15. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்குப்** புணர்ச்சி இலக்கணம் தருக: $2 \times 2 = 4$

i) பைங்கூழ் ii) மரச்சட்டம்

iii) நடுக்கின்றி iv) வடகிழக்கு.

16. கீழ்க்காணும் இரு வினைமுற்றுகளில் ஏதேனும் **ஒன்றனுக்கு** தொழிற்பெயர் எழுதுக : $1 \times 2 = 2$

i) கற்றார் ii) எழுந்தது.

17. தற்குறிப் பேற்றணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக. $1 \times 4 = 4$

*அல்லது*

உள்ள முடைமை உடைமை பொருளுடைமை

நில்லாது நீங்கி விடும்.

- இக்குறட்பாவில் பயின்றுள்ள அணியைச் சுட்டி விளக்குக.

18. ஐகாரக்குறுக்கமாவது யாது ? சான்றுடன் விளக்குக. $1 \times 2 = 2$

*அல்லது*

மொழி எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

19. திணை வழுவமைதியைச் சுட்டுக. $1 \times 2 = 2$

*அல்லது*

கொளல் வினா, கொடை வினா - இவற்றை விளக்குக.

VI. 20. கீழ்க்காணும் உரைநடையைப் படித்துத் தகுந்த நிறுத்தற் குறியிடுக : $1 \times 2 = 2$

பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படி உயர்ந்த

புலவர்களின் காவியங்களைப் படி சிறந்த உணர்வினர்

எழுதிய கதைகளைப் படி என்று உனக்கு அடிக்கடி சொல்லியிருக்கிறேன்

[ Turn over

21. கீழ்க்காணும் சொற்களில் **இரண்டனுக்கு** திருந்திய சொற்களை எழுதுக : $2 \times 1 = 2$

i) கடகால் ii) எண்ணை

iii) தலகாணி iv) சீயக்காய்.

22. கீழ்க்காணும் சொற்களில் **இரண்டினைப்** பிரித்து எழுதுக : $2 \times 1 = 2$

i) கொண்டேத்தும் ii) உளதாகும்

iii) வண்பயன் iv) இணரெரி.

23. கீழ்க்காணும் தொடர்களில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக : $3 \times 2 = 6$

i) உல்லங்கை நெல்லிக்கனி

ii) மறுந்தும் விருந்தும் மூன்ரு வேலைகள்

iii) ஞாயிரு வாறத்தின் முதல்நாள்.

24. கீழ்க்காணும் வேற்றுமொழிச் சொற்களுக்குத் தனித்தமிழ்ச் சொற்களை எழுதுக : $2 \times 1 = 2$

i) பஜார் ii) ஹாஸ்டல்.

25. கீழ்க்காணும் தொடரைச் செய்தி வாக்கியமாக மாற்றுக : $1 \times 2 = 2$

இளமையில் கல்.

26. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்குக : $1 \times 2 = 2$

அந்த காலத்தில் சிதம்பரனாரது சொற்பொழிவு இல்லாதக் கூட்டத்தை காண்பதரிது.

27. கீழ்க்காணும் தொடரை வினாத்தொடராக மாற்றுக : $1 \times 2 = 2$

திருவள்ளுவர் சிலை அழகாக உள்ளது

VII. 28. கீழ்க்காணும் ஆங்கிலத் தொடர்களைத் தமிழில் மொழிமாற்றம் செய்க : $1 \times 4 = 4$

Union is strength. What we cannot do alone, we do with the help of others. One man cannot roll a big piece of rock. Two or more men can do so. If we are united, nobody can harm us.

29. கீழ்க்காணும் மரபுத் தொடர்கள் அல்லது பழமொழிகளில் எவையேனும் **மூன்றனைத்** தமிழில் மொழிபெயர்க்க : $3 \times 2 = 6$

i) A penny saved is a penny gained

ii) A young calf knows no fear

iii) Barking dogs seldom bite

iv) Knowledge is power

v) Face is the index of the mind.